PHOENIX அக்கினிப் பறவைகள்



# தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவிலும் அடையாள உண்ணாநிலைப் போராட்டத்திலும் உலகளாவிய ரீதியில் இணைந்த தமிழர்கள்



இவ்வாண்டு தியாகதீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் 32ம் ஆண்டு நினைவு நிகழ்வில் அக்கினிப் பறவைகள் அமைப்பும் உலகில் பரந்து வாழும் தமிழர்கள் பலரும் இணைந்து லெப். கேணல் திலீபனை நினைவு கூர்ந்தனர்.

இக்கூட்டு முயற்சியில் பல நினைவு நிகழ்வுகள் ஒழுங்கு படுத்தப்பட்டு, அடையாள உண்ணாநிலைப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு, தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவுப்பகிர்வுகளும் ஆவணப்படுத்தப்பட்டன. புலம்பெயர்ந்த தேசத்தில் நிகழ்ந்த இம்முயற்சியும், தாயகத்தில் பல இடங்களிலும் உணர்வுபூர்வமாக இவ்வாண்டில் நினைவுகூரப்பட்டதும் இலங்கை அரசுக்கும் சர்வதேச சமூகத்துக்கும் ஒரு தெளிவான செய்தியினைக் கூறியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

தியாகதீபம் லெப். கேணல் திலீபன் அவர்களின் உண்ணாநிலைப்-போராட்டத்தின் தொடக்க நாளாகிய 15.09.19 அன்று சுவிஸ் நாட்டின் பாசல் மாநிலத்தில் அக்கினிப் பறவைகள் அமைப்பினால் நினைவுநிகழ்வு ஒன்று ஒழுங்குபடுத்தப்பட்டது. இதன்போது பல கலைநிகழ்வுகள் நடைபெற்ற-தோடு, தமிழ்நெட்டின் ஒருங்கிணைப்-பாளரினால் சிறப்புரை ஒன்று நிகழ்த்தப்பட்டது. இவ்வுரையில் தற்போது நடைபெற்றுக் கொண்டிருக்கும் கட்டமைக்கப்பட்ட இனவழிப்புத் தொடர்பாகவும் மற்றும் பூகோள அரசியல் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டது.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து 22.09.19 அன்று அவுஸ்திரேலியா நாட்டின் மெல்பேர்ண் நகரில் மெல்பேர்ண் வாழ் தமிழர்களினால் ஒரு வணக்க நிகழ்வு மேற்கொள்ளப்பட்டது.

(c) All rights reserved

தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் நினைவு நாளாகிய 26.09.19 அன்று அக்கினிப் பறவைகள் அமைப்பினராலும் மற்றும் மெல்பேர்ண், சிட்னி வாழ் இளைஞர்களாலும் 30 மணிநேர அடையாள உண்ணாநிலைப்போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது. இதன்போது அக்கினிப் பறவைகள் அமைப்பு 10 கோரிக்கைகளையும், அவுஸ்திரேலிய வாழ் இளைஞர்கள் 11 கோரிக்கைகளையும் முன்வைத்தனர்.



*அக்கினிப் பறவைகள் பேரணியாக நடந்து சென்றனர்*

அத்துடன் அக்கினிப் பறவைகள் அமைப்பு சுவிஸ் நாட்டின் பேர்ண் மாநிலத்தில் தங்களின் அடையாள உண்ணா-நிலைப்போராட்டத்தை ஒரு பொது இடத்தில் ஆரம்பித்து அங்கிருந்து பேர்ண் சிவன் கோவிலுக்குப் பேரணியாக நடந்து சென்றனர். சிவன் கோவிலில் ஒரு ஒன்றுகூடல் ஒழுங்குபடுத்தப்பட்டு, தியாக தீபம் லெப். கேணல் திலீபனுக்கான ஒரு சிறப்புப்பூசையும் மேற்கொள்ளப்பட்டது. மேலும், கேணல். சங்கர் அவர்களின் திருவுருவப்படமும் வைக்கப்பட்டு வணக்கம் செலுத்தப்பட்டது.




*சிட்னியிலும் சிட்னிவாழ் இளைஞர்களால் ஒரு நினைவு நிகழ்வு நடாத்தப்பட்டது*

அதே நாளில் சிட்னியிலும் சிட்னிவாழ் இளைஞர்களால் ஒரு நினைவு நிகழ்வு நடாத்தப்பட்டது. அந்நிகழ்வில் பல கலைநிகழ்வுகள் நடைபெற்றதோடு, லெப். கேணல் திலீபன் தொடர்பான ஒரு காணொளியும் ஒளிபரப்பப்பட்டது.

அக்காணொளியில் லெப்.கேணல் திலீபன் தொடர்பான கருத்துக்களும் நினைவுகளும் அவுஸ்திரேலியா, பிரிட்டன், மலேசியா, நியூஸ்லேண்ட் மற்றும் சுவிஸ் வாழ் தமிழர்களினால் பகிரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**எதிர்வரும் காலங்களிலும் தியாகதீபம் லெப். கேணல் திலீபனின் நினைவுகூரல் நிகழ்விலும் மற்றும் அடையாள உண்ணாநிலைப்-போராட்டங்களிலும் தமிழீழச் செயற்பாட்டாளர்கள் மற்றும் பொதுமக்கள் அனைவரையும் எம்முடன் இணைந்து செயற்படுமாறு அக்கினிப் பறவைகளாகிய நாங்கள் இத்தருணத்தில் வேண்டி நிற்கின்றோம்.**



(c) All rights reserved

# மாதாந்த செய்திச் சுருள்

**03.09.** அன்று 54வது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

**04.09.**"ஸ்ரீதேவி" எனும் பெயரில் கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்குமிடையிலான புதிய புகையிரதச் சேவை ஆரம்பம்.

**07.09.** யாழ் நகரசபை மண்டபத்துக்கான அத்திவாரக்கல் ரணிலினால் நாட்டப்பட்டது.

**08.09.** ராஜ் சோமதேவ எனும் பேராசிரியர் யாழில் நிலை-கொண்டிருக்கும் இலங்கை இராணுவத்திற்கு இலங்கையின் தொல்பொருள் தொடர்பாக வகுப்பெடுத்தார்.

**08.09.** அன்று 2009 இல் புலிகள் அழிக்கப்பட்ட நாளே தன் வாழ்நாளில் மகிழ்வான நாளென முரளிதரன் கூறியுள்ளார்.

**10.09.** சத்துருகொண்டான் படுகொலை தமிழீழத்தில் நினைவுகூறப்பட்டது.

**11.09.** டோகோ நாட்டின் ஜனாதிபதி இலங்கைக்கு மூன்று நாள் விஜயத்தினை மேற்-கொண்டார். இவ்விஜயத்தில் முதலீடுகள் தொடர்பாகவும் மற்றும் பயங்கரவாதத்தடுப்புத் தொடர்பாகவும் பேசப்பட்டுள்ளது.

**11.09.** "Pulathisi Intercity Express" எனும் பெயரில் கொழும்புக்கும் பொலநறுவைக்குமிடையிலான புதிய புகையிரதச் சேவை ஆரம்பம்.

**15.09.** யாழ்ப்பாணத்திலுள்ள காணாமல் போனோருக்கான அலுவலகத்துக்கு முன்பாக உறவினர்கள் ஆர்ப்பாட்டம்.

**16.09.** "எழுக தமிழ்" பேரணியும் அதற்கு ஆதரவாக கடையடைப்புப் போராட்டமும் நடைபெற்றது.

**16.09.** கொழும்பில் "தாமரைக் கோபுரம்" திறந்து வைக்கப்பட்டது. இதன்போது சீன நிறுவனமொன்று பண மோசடியில் ஈடுபட்டதாக சிறிசேனா அத்திறப்புநிகழ்வின் போது கூறியிருந்தார்.

**18.09.** ஜனாதிபதித் தேர்தல் 16.11.19 அன்று நடைபெறுமென உத்தியோகபூர்வமாக அறிவிக்க-ப்பட்டது.

**19.09.** தவசீலன் எனும் ஊடகவியலாளருக்கு பயங்கரவாதத் தடுப்புப்பிரிவினரால் அழைப்-பாணை ஒன்று விடுக்கப்-பட்டுள்ளது.

**19.09.** விடுதலைப் புலிகளால் நாட்டப்பட்ட தேக்குமரங்கள் வவுனியாவில் இலங்கை வன-வளத்துறையினரால் தறிக்கப்-பட்டன.

**19.09.** அட்மிரல் வசந்த காரணகொட சிறிசேனாவினால் மதிப்பளிக்கப்பட்டார்.

**20.09.** யாழ்ப்பாண இந்துக்கல்லூரியின் அதிபர் லஞ்ச ஒழிப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டார்.

**20.09.** கேப்பாப்புலவு நிலமீட்புப் போராட்டத்தில் ஈடுபடுவோர் வட மாகாணத்தின் ஆளுநரைச் சந்தித்தனர்.

**22.09.** நாகர்கோவில் படுகொலை தமிழீழத்தில் நினைவு கூரப்பட்டது.

**22.09.** உயிர்த்த ஞாயிறுத் தாக்குதலை விசாரிக்க ஜனாதிபதிக் குழுவொன்று அமைக்கப்-பட்டுள்ளது.

**23.09.** "Avant Garde" வழக்கிலிருந்து கோத்தா விடுவிப்பு.

**24.09.** இலங்கை ஒரு மேல்-நடுத்தர நாடென உலக வங்கி அறிவித்துள்ளது.

**24.09.** ஊனமுற்ற இலங்கை இராணுவத்தினரின் போராட்டத்துக்குப்பின் அவர்களுக்கு வாழ்நாள் முழுவதும் ஊதியம் வழங்கப்படுமென நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

**24.09.** ஜனாதிபதித் தேர்தலின் போது பொய்ப்பரப்புரைகளையும் மற்றும் வெறுப்பைத்தூண்டும் பேச்சுக்களையும் தடுக்க முகநூல் நிறுவனம் இலங்கைத் தேர்தல் ஆணையத்துடன் இணைந்து வேலைசெய்யும் என அறிவிக்கப்-பட்டுள்ளது.

**25.09.** உப்புவெளியில் அமைந்துள்ள புத்தர்சிலை சேதமாக்கப்பட்டது.

**25.09.** "Surfing" விளையாட்டுத்-துறையின் உலகக் கிண்ணம் அறுகம் குடாவில் ஆரம்பமாகியது.

**26.09.** தியாக தீபம் லெப். கேணல் திலீபனின் நினைவுநிகழ்வு தமிழீழ-மெங்கும் நினைவுகூறப்பட்டது.

**26.09.** சம்பள உயர்வு கோரி தமிழர் தாயகத்தில் ஆசிரியர்கள் பணிப்-புறக்கணிப்பினை மேற்-கொண்டனர்.

**27.09.** 750 மில்லியன் ரூபா பெறுமதியுள்ள "robot" கருவிகள் சீனாவினால் இலங்கைக்கு அன்பளிப்பாகக் கொடுக்கப்பட்டது.

**27.09.** நியூயோர்க்கில் ஐநாவின் கூட்டத்தின் போது பாகிஸ்தானின் ஜனாதிபதி கரும்புலித்தாக்குதலை ஒரு உதாரணமாக தனது உரையில் உபயோகித்துள்ளார்.

**30.09.** கோத்தாவின் யாழ் வருகையினை முன்னிட்டு ஆனையிறவில் புதிய சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

**30.09.** காணாமல் போனோரின் தினத்தன்று சுற்றுலா தொடர்பான நிகழ்வில் ஐநாவின் இலங்கைக்கான ஒருங்கிணைப்பாளர் கலந்து கொண்டார். அத்துடன் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களை தாங்கள் மறக்கவில்லை என்று அவர் அந்நாளில் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருந்தார்.

(c) All rights reserved

## இனவழிப்பின் சுவடுகள்

- படுவாங்கரை மற்றும் தரவை போன்ற இடங்களில் இராணுவக் குடியேற்றங்களால் பாதிக்கப்படும் விவசாயத்துறையால் பல தமிழ் விவசாயிகளின் நிலை மோசமடைந்துள்ளது.
- நெடுங்கேணி காவற்றுறையினர் இலங்கையின் தொல்பொருள்த்துறையால் தூண்டப்பட்டு வவுனியாவின் வெடுக்குநாரி ஆலய சபயினரை பக்திப் பாடல்களை ஒலிபரப்பக்கூடாதெனத் தடுத்துள்ளனர்.
- ஹிஸ்புல்லாவின் தலைமையில் திருகோணமலையின் தென்கிழக்குப் பகுதிகளில் பெருமளவு நில ஆக்கிரமிப்புகள் நடத்தப்பட்டுள்ளன.
- மட்டக்களப்பின் சரஸ்வதி மகாவித்தியாலயத்தினை வாகரையின் பிரதேச சபையின் அனுமதியின்றி இலங்கை இனவழிப்புப் படையினர் ஓர் உல்லாசப்போக்கிடமாக நடத்தி வருகின்றனர்.
- கன்னியாவில் தமிழ்ச்சைவ பக்தர்களை காவற்றுறையினர் அச்சுறுத்தியுள்ளனர்.
- விவசாய சமூகங்களை நிலைகுலைக்கும் ‘சேவாலங்கா’ சுற்றுலா முயற்சிகளுக்கு நோர்வே போன்ற நாடுகள் நிதி வழங்கி வருகின்றனர்.
- கச்சற்கொடியில் இலங்கைக் காவற்றுறையினரும், STFம் தமிழர்களின் வழிபாட்டுக்குத் தடைவிதித்துள்ளனர்.
- வட்டகச்சியிலும் ஆனையிறவிலும் பண்ணைகளையும் உப்பு உற்பத்தியையும் இலங்கை இராணுவத்தினர் கைப்பற்றி ஆக்கிரமித்து வருகின்றனர்.
- செம்மலையில் நிராவியடிக் கோயிலில் தீர்த்தக்கேணிக்குள் நீதிமன்றத்தின் தீர்ப்பினை மீறி புத்தபிக்குவின் உடல் தகனம் செய்யப்பட்டது.
- செம்மலையில் புத்த பிக்குகளின் சட்டவிரோத செயற்பாடுகள் பெரும் போராட்டங்களை உண்டாக்கின.
- இலங்கை அரசால் நடத்தப்படும் *Daily News* பத்திரிகை பிக்குகளின் செயற்பாடுகளைக் கண்டித்து *ACHC* விடுத்த அறிக்கையை வெளியிட மறுத்தது.

(c) All rights reserved

## அக்கினிப் பறவைகள் அமைப்பு முன்வைத்த *10* கோரிக்கைகள்

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

2. தமிழீழத்தில், சிங்களக் குடியேற்றங்கள் அமைப்பது நிறுத்தப்படவேண்டும்.

3. சுவிஸ் அரசாங்கம், இலங்கையுடனான, "இடப்பெயர்வு தொடர்பான கூட்டாண்மையிலிருந்து", விலகவேண்டும்.

4. சுவிஸ் அரசாங்கம் ஈழத்தமிழர்களின் தேசியத்தையும் மற்றும் ஈழத்தமிழர்களின் தாயகமான தமிழீழத்தையும், அங்கீகரிக்க வேண்டும்.

5. சுவிஸ்நாட்டு மத்திய அரசின் சட்டமா அலுவலகம் (Bundesanwaltschaft) தமிழரின் விடுதலையமைப்புக்கு எதிரான நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். அத்தோடு பக்கச்சார்பாகத் தமிழர்களைக் குற்றவாளிகளாக்கும் நடவடிக்கைகளை சுவிஸ் அரசாங்கம் நிறுத்த வேண்டும்.

6. தமிழீழத்திற்கும் இலங்கைக்குமிடையிலான போர்களின்போது காணாமற்போன, மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான, ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அந்த விசாரணையில், இலங்கை அரசாங்கத்தின் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

7. அபகரிக்கப்பட்ட தமிழீழ நிலப்பரப்புகளை விடுவிக்க, இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும். அத்துடன், நில அபகரிப்புக்கு எதிராக இராணுவ முகாம்களின் முன் போராட்டம் செய்யும் மக்களை சர்வதேசச் சமூகத்தின் பிரதிநிதிகள் சந்திக்க வேண்டும்.

8. தமிழீழப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இலங்கை இராணுவத்தினர் ஓர் ஆக்கிரமிப்புப்படை என்பதை சர்வதேசச் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

9. ஈழத்தமிழர்களுக்கும் மற்றும் இலங்கை அரசுக்குமிடையிலான பிரச்சனைகள் தொடர்பான ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அந்த விசாரணையின் முக்கிய அம்சமாக தமிழினவழிப்பு இருத்தல் வேண்டும். அத்தோடு, அந்த விசாரணையில் பிரித்தானிய காலனியத்துவவாதிகளின் நடவடிக்கைகளும், நோக்கங்களும், மகாவம்சச் சித்தாந்தமும், இலங்கைத்தீவின் பூகோள முக்கியத்துவமும் மற்றும் முள்ளிவாய்க்காற் படுகொலையில்; அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, சீனா போன்ற நாடுகளினதும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பும் விசாரிக்கப்படவேண்டும்.

10. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையைக்கொண்ட, தமிழீழம் தொடர்பான சர்வதேச வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும். அவ்வாக்கெடுப்பின் விதிமுறையில் தமிழீழத்தில் வாழும் ஈழத்தமிழர்களும், புலம்பெயர்ந்து வேறுநாடுகளில் குடியுரிமை பெற்றும், குடியுரிமை பெறாமலும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களும், வாக்களிக்கக்கூடிய பொறிமுறைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

## அவுஸ்திரேலியா வாழ் இளைஞர்கள் முன்வைத்த 11 கோரிக்கைகள்

1. பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், கைதுசெய்யப்பட்டிருக்கும் தமிழ் அரசியற்கைதிகள் விடுதலை செய்யப்படவேண்டும்.

2. தமிழீழத்தில், சிங்களக் குடியேற்றங்கள் அமைப்பது நிறுத்தப்படவேண்டும்.

3. காலவரையறையின்றி தடுப்பில் வைக்கப்படும் அனைத்துத் தமிழ் அகதிகளையும் அவுஸ்திரேலிய அரசாங்கம் உடனடியாக விடுவிக்க வேண்டும்.

4. அவுஸ்திரேலியாவில் புகலிடம் கோருவோர்கள் சம்மந்தமான கொள்கைகளை அவுஸ்திரேலிய அரசாங்கம் மீள்பரிசீலனை செய்யவேண்டும்.

5. இலங்கை அரசுடனான அனைத்து வெளியுற்றவுக்கொள்கைகளிலிருந்தும் அவுஸ்திரேலிய அரசாங்கம் உடனடியாக விலகவேண்டும். இதில் குறிப்பாக இராணுவ மற்றும் வாணிப உடன்படிக்கைகளினூடாக வளர்க்கப்படும் உறவகளிலிருந்து இவ்வரசாங்கம் விலகவேண்டும். Indo – Pacific Endeavour 2019 எனும் கூட்டுறவினூடாக, இராணுவப் பயிற்சிகளை இலங்கை இனவழிப்புப் படைகளுக்கு வழங்குவதற்காக ஆயிரத்திற்கும் மேற்பட்ட அவுஸ்திரேலிய இராணுவத்தினரையும் பல கடற்படைக்கப்பல்களையும் அனுப்பும் முயற்சிகளிலிருந்து, அவுஸ்திரேலிய அரசாங்கம் உடனடியாக விலகவேண்டும்.

6. அவுஸ்திரேலிய அரசாங்கம் ஈழத்தமிழர்களின் தேசியத்தையும் மற்றும் ஈழத்தமிழர்களின் தாயகமான தமிழீழத்தையும் அங்கீகரிக்க வேண்டும்.

7. தமிழீழத்திற்கும் இலங்கைக்குமிடையிலான போர்களின்போது காணாமற்போன, மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பான, ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அந்த விசாரணையில், இலங்கை அரசாங்கத்தின் முறைப்படுத்தப்பட்ட நடவடிக்கைகளின் மீது முக்கிய கவனம் செலுத்தப்படவேண்டும்.

8. அபகரிக்கப்பட்ட தமிழீழ நிலப்பரப்புகளை விடுவிக்க, இலங்கை அரசாங்கத்தின் மீது சர்வதேச அழுத்தம் பிரயோகிக்கப்படவேண்டும். அத்துடன், நில அபகரிப்புக்கு எதிராக இராணுவ முகாம்களின் முன் போராட்டம் செய்யும் மக்களை சர்வதேசச் சமூகத்தின் பிரதிநிதிகள் சந்திக்க வேண்டும்.

9. தமிழீழப் பகுதிகளில் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கும் இலங்கை இராணுவத்தினர் ஓர் ஆக்கிரமிப்புப்படை என்பதை சர்வதேசச் சமூகம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

10. ஈழத்தமிழர்களுக்கும் மற்றும் இலங்கை அரசுக்குமிடையிலான பிரச்சனைகள் தொடர்பான ஒரு சர்வதேச விசாரணை நடத்தப்படவேண்டும். அந்த விசாரணையின் முக்கிய அம்சமாக தமிழினவழிப்பு இருத்தல் வேண்டும். அத்தோடு, அந்த விசாரணையில் பிரித்தானிய காலனியத்துவவாதிகளின் நடவடிக்கைகளும், நோக்கங்களும், மகாவம்சச் சித்தாந்தமும், இலங்கைத்தீவின் பூகோள முக்கியத்துவமும் மற்றும் முள்ளிவாய்க்காற் படுகொலையில்; அமெரிக்கா, பிரித்தானியா, இந்தியா, சீனா போன்ற நாடுகளினதும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பங்களிப்பும் விசாரிக்கப்படவேண்டும்.

11. வட்டுக்கோட்டைத் தீர்மானத்தின் அடிப்படையைக்கொண்ட, தமிழீழம் தொடர்பான சர்வதேச வாக்கெடுப்பு ஒன்று நடத்தப்படவேண்டும். அவ்வாக்கெடுப்பின் விதிமுறையில் தமிழீழத்தில் வாழும் ஈழத்தமிழர்களும், புலம்பெயர்ந்து வேறுநாடுகளில் குடியுரிமை பெற்றும், குடியுரிமை பெறாமலும் வாழ்ந்து கொண்டிருக்கும் ஈழத்தமிழர்களும், வாக்களிக்கக்கூடிய பொறிமுறைகள் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும

(c) All rights reserved